முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 2ம்பிரதிவாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர் இல்லை.வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.266/2023

வா.சா.1 கண்ணன் த/பெ அங்கப்பன்

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய சொத்தில் வில்லங்கம் பார்த்தேனா என்றால் வில்லங்கம் பார்த்தேன் வில்லங்கம் எதுவும் இல்லை. தாவா சொத்தை பொருத்து ஏற்கனவே நான் ஒரு கிரைய உடன் படிக்கை போட்டுள்ளேனா என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்கண்ட கிரைய உடன்படிக்கயையானது 22.02.2016ல் போடப்பட்டது என்றால் சரிதான் அது பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ( இணையதள நகல்).

2. தற்போது என்னிடம் காட்டப்படும் 23.09.2014 தேதியில் அடமான கடன் பத்திரம் என் மனைவி மாதேஷ்வரி பெயரில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது பி.வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது (இணையதள நகல்). மேற்படி பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆவணங்கள் இதுவரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டுதான் கிரையம் செய்யப்பட்டது.

3. மேற்படி இரு ஆவணங்களில் எந்த ஆவணம் ரத்து செய்யப்பட்டது என்றால் பி.வா.சா.2 ஆவணமான அடமான பத்திரம் ரத்து செய்யப்பட்டது. மேற்படி பி.வா.சா.2 ஆவணத்தை ரத்து செய்த ஆவணம் என்னிடம் உள்ளது. அந்த ரத்து செய்யப்பட்ட அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆவணங்களை பற்றி வா.சா.1ல் எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

4. கிரைய உடன்படிக்கை தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு மதிப்பு போடப்பட்டுள்ளது என்றால் ரூ.1,40,000/- என்று மதிப்பு போடப்பட்டுள்ளது. அந்த கிரைய உடன்படிக்கை படி முன் தொகையாக ரூ.1,00,000/- கொடுத்துள்ளீர்களா என்றால் சரிதான்.கிரய உடன்படிக்கை எவ்வளவு நாள் கெடு என்று அதில் விதிக்கப்பட்டுள்ளது என்றால் 3 வருடங்கள் விதிக்கப்பட்டுள்ளது. மீதி தொகையான ரூ.40,000/-த்தை கொடுப்பதற்க்கு 3 வருடம் கெடு விதிக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். என்னுடைய உடலில் இடது கால் முட்டியில் ஜவ்வு கிழிந்துவிட்டதால் அது சம்மந்தமாக அறுவைசிகிக்சை மேற்கொண்ட காரணத்தினால் 3 வருடத்தில் பணம் கொடுக்க இயலவில்லை.

5. பி.வா.சா.2 ஆவணமான அடமான பத்திரம் எவ்வளவு தொகை கடன் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.1,00,000/- கொடுக்கப்பட்டது. மீதியுள்ள கிரைய தொகையான ரூ.40,000/-த்தை செலுத்தி கிரையமாக பெற்றுயிருக்கலாமே ஏன் அடமானம் பெற்றீர்கள் என்றால் சரியல்ல. ரூ.40,000/- என்னால் தயார் செய்ய இயலவில்லை அதனால் கிரயம் செய்வது தள்ளிப்போனது. நானும், என் மனைவியும் ஒரே குடும்பமாக வசித்து வருகிறீர்களா என்றால் சரிதான்.

6. முதல் நாள் கிரையம் உடன்படிக்கை எழுதியது தெரிந்துதான் என் மனைவி இரண்டாவது நாள் அடமானம் பெற்றாரா என்றால் சரியல்ல. ரத்து செய்யும்போது மட்டும் தான் எனக்கு விபரம் தெரியும். இந்த கிரைய உடன்படிக்கையில் பூபதி, பிரகாஷ் ஆகியோர் தனித்தனியாக சாட்சி கையொப்பங்கள் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆவணங்களில் சாட்சி கையொப்பங்களான பூபதி, பிரகாஷ் ஆகியோர் கையொப்பங்கள் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.